**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.278/2020**

**Prosecution witness : அ.சா.3 Date : 16/11/2024**

| | |
|---|---|
| **Name : மனோகர்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 3 present. ) (Accused 1, 2, 4 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து நான் கோழி கடையில் வேலை செய்கிறேன். கடந்த 18.12.2019 ம் தேதியன்று மதியம் 2.30 மணிக்கு ஆட்டுக்காரனூர் சம்பவம் நடைபெற்ற இடத்தில் நான் மற்றும் சிவா நின்றுகொண்டிருந்தபோது பழனிச்சாமி உதவி காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார். அதில் நான்மற்றும் சிவா இருவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம். பார்வை மகஜரில் உள்ள விவரம் எனக்கு தெரியும். பார்வை மகஜர் அசா.ஆ.2 ஆகும். எனது தகப்பனார் ராஜீ எனபவரை சின்னப்பையன், ரவி, சின்னப்பிள்ளை, நாகலட்சுமி பாக்கியம் ஆகியோர் அடித்தார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

2. அ.சா.1 எனது தகப்பனார் என்றால் ஆமாம். அ.சா.1 க்கும் எதிரிக்கும் இடையே சிவில் சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் ஆமாம். எதிரிகளை அடித்துவிட்டதாக அ.சா.1 மீது இதே நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம். சம்பவ சமயத்தில் நான் எங்கிருந்தேன் என்றால் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்துகொண்டிருந்தேன். நான் புகார் கொடுத்து

விட்டு வந்து கொண்டிருந்தேன்.

3. போலீசார் என்னிடம் எத்தனை கையொப்பம் பெற்றார்கள் என்றால் 2 கையொப்பம் பெற்றார்கள். அரசு மருத்துவமனையில் ஒரு கையொப்பமும், சம்பவம் நடந்த மறுநாள் ஒரு கையொப்பமும் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் மகஜரில் உள்ள கையொப்பம் எங்கு போடப்பட்டது என்றால் சம்பவம் நடைபெற்ற மறுநாள் சம்பவ இடத்தில் போட்டோம். மகஜரில் என்ன எழுதியுள்ளது என்றால் யார் அடித்தார்கள் என்றும், கெட்ட வார்த்தையால் பேசியதும், எதிரிகள் பெயர், விவரம் எழுதியுள்ளது.

4. எழுதியதில் தான் நான் கையொப்பம் செய்தேன். சிவா என்பவர் எப்போது கையொப்பம் செய்தார் என்றால் எனது பக்கத்தில் இருந்தபோது கையொப்பம் செய்தார். அ.சா.1 எனது தகப்பனார் என்பதால் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது அ.சா.1 ஆனது எனது தந்தை கேட்டுக்கொண்டதற்குகிணங்க சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/-D.மயில்சாமி
**நீதிமன்ற நடுவர் எண்-2,**
**மேட்டூர்.**